# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண் 119/2017/பே.2

ஆணை எண். 001 /2018/ நாள் – 02 –01–2018

**திருமதி ச. கல்பனா,**
**9–2–46, நடுத்தெரு,**
**அக்ரஹாரம்,**
**வத்தலகுண்டு,**
**நிலக்கோட்டை வட்டம்,**
**திண்டுக்கல் மாவட்டம். .624 202** --- **முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**வத்தலகுண்டு பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம்.** --- **எதிர் மனுதாரர்.**

முறையீட்டு மனுதாரர் திருமதி ச. கல்பனா, 9–2–46, நடுத்தெரு, அக்ரஹாரம், வத்தலகுண்டு அவர்களின் 24.05.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2017 ம் நாளன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 119/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 30.05.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட மனுவிற்கான உரிய விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 494/2016/அ.3/நாள் 22.06.2017–ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

திரு ராமக்கோனார், என்பவரது முறையீட்டு மனுவின் அடிப்படையில் உரிய அறிக்கைகள் வாக்குமூலங்கள் பெறப்பட்டு ஆவணங்களின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்பட்டு இம்முறைமன்ற நடுவ ஆணை எண். 207/2016/நாள் 27.12.2016 ல் சொத்து வரி வசூல் முறைகேடு தொடர்பாக சம்பந்தப்பட்ட வரித் தண்டலர் மற்றும் செயல் அலுவலர் மீது நடவடிக்கை தொடர பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணையின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் பேரூராட்சி மூலம் போலியான இரசீதுகள் வழங்கியதால் பாதிக்கப்பட்ட தனக்கு இரண்டு வீடுகளுக்கான உண்மையான சொத்து வரி இரசீதினை வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி மனுவிலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழி முறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) சட்டம் 2014 விதி 6-ன்படி ரூ10/-க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணம் ஒட்டப்படவில்லை. விதிகளின்படி தேவையானல் மனு செய்யமாறு தெரிவிக்கப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 02 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர். 3/1/18

பெறுநர்

1.திருமதி ச. கல்யாணி,
9-2-46, நடுத்தெரு,
அக்ரஹாரம்,
வத்தலகுண்டு,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.- 624 202

2.செயல் அலுவலர்,
வத்தலகுண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.- 624 202